செ.வெ.எண்.91 நாள்: 11.03.2021

நீலகிரி மாவட்டத்தில், நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களை சுழற்சி முறையில் 3 சட்டமன்ற தொகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் பணிகளை, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

---

நீலகிரி மாவட்டத்தில், நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களை சுழற்சி முறையில் 3 சட்டமன்ற தொகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவில் இன்று (11.03.2021) நடைபெற்றது. இப்பணியினை, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நீலகிரி மாவட்டத்தில் வாக்குச்சாவடிகள், துணை வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணும் மையத்தில் தேவையான அடிப்படை மற்றும் பாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நடைபெறவுள்ள சட்டமன்ற பொது தேர்தலில் நமது மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில், சுழற்சி முறையில் மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களை ஒதுக்கீடு செய்து அந்தந்த சட்டமன்ற தொகுதிக்களுக்கு அனுப்பி வைத்து, வாக்கு இயந்திர கிடங்கில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் 868 வாக்குச்சாவடிகள் உள்ளது. ஒரு வாக்குச்சாவடிக்கு 4 வாக்குச்சாவடி அலுவலர்கள் என்ற விகிதத்தில் 3,472 அலுவலர்கள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் என 696 வாக்குச்சாவடி அலுவலர்கள் ஆக மொத்தம் 4,168 வாக்குச்சாவடி அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளார்கள். இன்று சுழற்சி முறையில் வாக்குச்சாவடி அலுவலர்களை 3 சட்டமன்ற தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது.

மேலும், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு 14.03.2021 அன்று உதகை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு உதகை கிறிஸ்டஸ் ரெக்ஸ் உயர்நிலை பள்ளியிலும், கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தேவர்சோலை மானிங்ஸ்டார் உயர்நிலை பள்ளியிலும், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு குன்னூர் ஜோசப் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிலும் தேவையான பயிற்சிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது (பொறுப்பு) திரு.முகம்மது குதுரதுல்லா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.நசாருதீன், தேர்தல் தனி வட்டாட்சியர் திருமதி.புஷ்பாதேவி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.